# சாகித்ய அகாதெமி விருதுபெற்ற நாஞ்சில் நாடனின் சூடிய பூ சூடற்க – உள்ளடக்கச் செய்திகளும் சிந்தனைகளும்

*முனைவர் உ. கருப்பத்தேவன்*
உதவிப் பேராசிரியர் & தலைவர்
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7711

**ஆய்வுச்சுருக்கம்**

*19-20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்மொழி பல்வேறு திறனாய்வு முறைகளைப் பெற்று காலந்தோறும் தன்னைப் புதுப்பித்து வரும்நிலையில் சாகித்ய அகாதெமி விருதுபெற்ற இலக்கியங்கள் எனும் வரிசையில் பல்வேறு படைப்பாளர்கள், படைப்புக்கள், படைப்புக்களின் தன்மை, படைப்புக்களின் வழி அறியலாகும் ஆக்கச் சிந்தனை முதலியவற்றைக் காணலாம். சான்றாக நாஞ்சில் நாடனின் சூடிய பூ சூடற்க எனும் தொகுப்பில் அமைந்துள்ள உள்ளடக்கச் செய்திகளை நாஞ்சில்நாடன் வழி நின்று விளக்குவதாக அமைகிறது. நாஞ்சில்நாடன் - படைப்புலகப் பின்னணி, நாஞ்சில் நாடனின் இலக்கியப் பதிவுகள் - களன்கள், உந்தித் தீ - வயிற்றுப்பசி, எழுத்தாளர்களின் நிலை, தமிழ் எழுத்தாளன் வாழ்க்கை நிலையும்சமூக இருப்பும், தேர்தல் ஆணையம் - தேர்தல் நடைமுறைகளைச்சாடல், அரசு அலுவலகங்களில் விழாக்கள் - குடியரசு தினவிழா, இசைமேதையின் மனிதாபிமானமற்ற செயலும் மரணமும், சாத்தாங்கோயில்களில் பூசாரிகளாகப் பணியாற்றும் நம்பியார்களின் அவல வாழ்க்கை, சிறுதெய்வ நெறியும் பெருந்தெய்வ நெறியும், எல்லைக் கோடுகள் தேவையற்றவை. 'அனைவரும் இந்தியரே'', சென்னையில் லைன் வீடுகளில் குடியிருப்போர் நிலை - தேசிய ஒருமைப்பாடு, நாஞ்சில்நாடன் படைப்புலகம் - மதிப்பீடு என்ற செய்திகளின் அடிப்படையில் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

## முன்னுரை

ஒரு படைப்பாளியின் படைப்பிலக்கியத்தை ஆய்வு செய்வதற்கு அப்படைப்பாளியின் வாழ்க்கைத் தகவல்கள், படைப்பிலக்கியக் கொள்கை, சமூக மற்றும் வரலாற்றுப் பின்புலம், படைப்பாக்க முயற்சியில் படைப்பாளி எதிர்கொண்ட சோதனைகள், தேடல்கள், தூண்டல்கள், தாக்கங்கள் பற்றிய படைப்பாளியின் பின்னணிகளை அறிவது அவசியமாகும். அப்போதுதான் அப்படைப்பாளியின் படைப்புக்களின் உள்ளடக்கம், வடிவம், படைப்பின் நோக்கம், போக்குகள் ஆகியனவற்றைத் தெளிவாகக் கண்டடைய முடியும்.

## நாஞ்சில்நாடன் - படைப்புலகப்பின்னணி

'எழுத வேண்டும்; எழுத்தாளன் ஆகவேண்டும்; படைப்பாளி என்று போற்றப்பட வேண்டும்'' என்னும் திட்டமெல்லாம் நாஞ்சில் நாடனிடம் இருந்ததில்லை.

சிறுவயதிலேயே அதாவது பத்து வயதிலேயே அவர் தீவிர வாசகராக நூல்களை ஆழ்ந்து வாசிக்கத் தொடங்கியுள்ளார். அந்தக் காலகட்டத்தில் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் வேகமாக மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கமாக வளர்ந்து கொண்டிருந்தது. நாஞ்சில் நாடனுக்கு அப்போது பிளவுபடாத இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் மீதும் திராவிட இயக்கத்தின் மீதும் பற்று இருந்தது. அவருக்குப் பொதுவுடைமை இயக்கத்தின் பாதிப்பு ஏற்படுவதற்குக் காரணம் ஏ. கே. ஜி.யின் நெருங்கிய தொண்டராக இருந்த ஒருவர் தலைமறைவாக நாஞ்சில் நாடனின் ஊரில் வாழ்ந்ததே ஆகும். மலையாளியான அவர் நாஞ்சில் நாடனின் ஊரிலேயே திருமணம் செய்து கொண்டவர். அவர் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டவர். நாஞ்சில் நாடன் தன் மாணவப் பருவத்தில் தொடர்ந்து அவரிடம் பேசிப்பேசி நிறைய விடயங்களை அவதானித்துக் கொண்டார்.

1957 காலகட்டத்தில் நாஞ்சில்நாடன் தனது பத்து வயதில் திராவிட இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கினை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளார். திராவிட இயக்கத்தவரின் மேடைத் தமிழ், அவர்கள் எடுத்தாளுகின்ற தமிழ்க்கவிதை வரிகள் ஆகியன நாஞ்சில்நாடனைப் பெரிதும் ஈர்த்தன. திராவிட இயக்கத்தினர் மகாகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி ஆகியனவற்றிலிருந்து உணர்ச்சிமயமாக இருக்கின்ற எந்தப்பாடலையும் மேடையில் சிறப்பாக மேற்காட்டிப் பேசியது நாஞ்சில் நாடனுக்கு உத்வேகத்தையும் தமிழ்ப்பற்றையும் ஊட்டி ஊக்குவித்தன.

### நாஞ்சில் நாடனின் இலக்கியப் பதிவுகள் - களன்கள்

நாஞ்சில் நாடனின் இலக்கியப் பதிவுகளின் களன்களாக நாஞ்சில் நாட்டின் மண்சார்ந்த மரபுகள் அமைந்திருக்கின்றன; இதற்கடுத்த நிலையில் மும்பையைக் களமாகக்கொண்ட இலக்கியப்பதிவுகளைக் காணமுடிகின்றது. கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக நாஞ்சில் நாடன் கோவையில்தான் வாழ்ந்து வருகின்றார். ஆயினும் அவரது கதைப் படைப்புக்கள் அனைத்தும் அவரது இளமைக் காலம் சார்ந்தே அமைந்திருக்கின்றன. அனுபவங்கள் வளர்ந்து முதிர்ந்திருப்பினும் ஒரு எழுத்தாளனுக்குரிய மனநிலை பெரும் பாலும் கடந்த காலத்தைச் சுற்றியே அமையும் என்பதற்கு நாஞ்சில் நாடனின் கதைப் படைப்புக்கள் சான்றளிக்கின்றன.

நாஞ்சில் நாடன் தன்னை மிகப்பெரிய படைப்பாளி (Critic) எனக் குறிப்பிடுவதில்லை. ஆனால் தேர்ந்த வாசகன் என்ற நம்பிக்கை எப்போதும் அவருக்கு உண்டு. இளைய தலைமுறைப் படைப்பாளிகளிடம் 'தம்பி இதை ஏன் செய்கிறீர்கள்? இதைச் செய்து தான் ஆக வேண்டுமா? எனக் கேட்பார். பிறகு அதை அவர்களின் முடிவுக்கே விட்டு விடுவார். படைப்புலகில் படைப்பாளிகள் அனைவரும் சேர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே நாஞ்சில் நாடனின் கணிப்பு.

கீரனூர் ஜாகிர்ராஜாவின் 'துருக்கித்தொப்பி', 'வடக்கேமுறிஅலிமா', 'மீன்குகைவாசிகள்', எஸ். செந்தில்குமாரின் 'முறிமருந்து' முதலான நாவல்கள் நாஞ்சில் நாடனுக்கு மிகவும் பிடித்தமானவை. அவர் ஒரு திறனாய்வாளர் (Creative Writer), நாவலாசிரியன்; சிறுதைப் படைப்பாளி என்னும் தளங்களில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பவர். பிறர் படைப்புக்கள் சிறப்பான கூறுகளைத் தொடர்ந்து பாராட்டி, ஊக்குவித்து வருபவர். இப்படிப்பட்ட இவரது 15 சிறுகதைகளை தொகுப்பாகக் கொண்ட 'சூடிய பூ சூடற்க' - என்னும் நூலுக்கு 2011ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இந்நூலில் அமைந்துள்ள சிறுகதைகளின் - உள்ளடக்கச் செய்திகளும் சிந்தனைகளும் என்னும் பொருளில் அமைந்துள்ள இவ்ஆய்வுக் கட்டுரை இடம் பெற்றுள்ள உள்ளடக்கச் செய்திகள் மற்றும் அடிக்கருத்துக்களைப் பன்முகச் சிந்தனைகளில் வெளிப்படுத்து வதாக அமைகின்றது.

### உந்தித்தீ – வயிற்றுப்பசி

நஞ்சில் நாடன் அணைக்க முடியாத உந்தித் தீயை, வயிற்றுப் பசியின் கொடுமையை யாம் உண்பேம் என்னும் சிறுகதையில் உயிரியற்கை என்ற நிலையில் மனிதாபி மானத்தோடு சுட்டிக் காட்டியுள்ளார். இந்த உந்தித் தீயே - வயிற்றப் பசியின் கொடுமையே அவரது சிறுகதையின் அடிநாதமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இச்சிறுகதையில் மழை பெய்ய வேண்டிய காலத்தில் பொய்த்து விடுகின்றது. பூஞ்சைக் காடுகள் வறண்ட பாறைகளாகின்றன. குடிக்கத் தண்ணீரும் கரம்பப்புற்களும் கிடைக்காத கால்நடைகள் தோல், இறைச்சி, எலும்பு, கொம்புகளுக்காக டெம்போக்களில் நாக்பூருக்குப் போகின்றன. தாலிகளும் பித்தளைப் பானைகளும் மார்வாடிக் கடைகளுக்குப் போகின்றன. புழு மண்டிய கோதுமை மாவுகள் மக்கள் உணவுக்காக நியாயவிலைக்கு ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வறண்ட பின்னணியில் எழுபத்து மூன்று வயதான 'கன்பத் சக்காரம் நாத்ரே இடைவிடாமல் பல தொழில்களைச் செய்து வயிற்றுப்பாட்டைச் சமாளிக்கின்றார். இந்நிலையில் அவரது மகன் பாகோஜி கன்பத் நாத்ரே, மனைவி மற்றும் இரண்டு மகள்களுடன் தற்கொலை செய்து கொள்கின்றான். 'கும்பி'' என்பது தூராத கிணறு. அவியாத நெருப்பு. அதை அணைக்க அவன் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்கின்றான்.

இந்நிலையில் தானும் தற்கொலை செய்து கொள்ள விரும்பாத 'கன்பத் சக்காராம் நாத்ரே,'' ஆந்திரப் பிரதேசத்தில் அதிலாபாத் ரயில்நிலையத்திலிருந்து ரயிலில் பயணம் செய்கின்றார். அவர் பயணம் செய்த வண்டியில் விற்பனைப் பிரதிநிதியான 'பாபுராவ்'' என்பவனும் பயணிக்கின்றான். பாபுராவுக்கு அதிகமான வருமானம் இல்லை. அவன் பசிக்காக உண்பவன், அவனின் உறக்கத்திற்காக நிதானமாக ரொட்டியைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தான்.

வாய்க்குக் கொண்டு போகும் நேரம். பாபுராவின் உயர்த்திய கையை முதிய தோல் சுருங்கிய நாத்ரேயின் கை எட்டிப் பிடித்து வெடவெடத்தது, குலைந்து ஒலித்த குரலால் அதிர்வுற்று பாபுராவ் நிமிர்ந்து பார்த்தான். 'அமி காணார்... அதி காணார்''. 'எனக்குத் தா'' என்றல்ல, நான் தின்பேன் என்றல்ல. 'நாம் உண்பேம்'' என.... பல்கிப் பெருகிக் கிளைத்துத் தழைத்த பசியின் மொழி பாபுராவை திடுக்கிடச் செய்தது... தின்ற மிச்சமல்லவா என இரங்கியது மனது. ...யுகங்களாய்த் தொடர்ந்த மனிதகுலத் தின் பசியின் வடிவமாய் நாத்ரே காரமான பச்சை மிளகாயைக் 'கரக்'' கெனக் கடித்தார். தன்னிடம் இருந்த தண்ணீர் போத்தலை அவரிடம் நீட்டினான். அடுத்த ஸ்டேஷன் எப்போது வரும் என்று தெரியவில்லை. 'வடா பாவ்'' கிடைக்கலாம். பச்சை வாழைப் பழங்கள் கிடைக்கலாம். அவருக்கு இரண்டு வாங்கித் தர வேண்டும் என சங்கல்பம் செய்துகொண்டான். காதில் தகப்பன் சாமியின் உபதேசம் போல ஒலித்துக் கொண்டிருந்தது நாத்ரேயின் குரல். மிச்ச வாழ்க்கைக்குமான மந்திரபோல 'யாம் உண்பேம்'' (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, யாம் உண்பேம், ப.36). இவ்வாறு நாஞ்சில் நாடன் உந்தித் தீ - வயிற்றுப் பசியின் கொடுமையை இச்சிறுகதையில் எடுத்துக் காட்டியுள்ளார். அதைப் போக்கும் மனிதநேயம் கொண்ட மனிதர்களும் இருப்பதை அவர் விற்பனைப் பிரதிநிதி பாபுராவ் நினைவுகளாலும் செயல்களாலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### எழுத்தாளர்களின் நிலை

நாஞ்சில் நாடன் எழுத்தாளர்களின் இன்றைய வாழ்க்கை நிலையைக் 'கதை எழுதுவதன் கதை'' என்னும் சிறுகதையில் சமூகப் பார்வையோடு விளக்கியுள்ளார். நாஞ்சில் நாடன் சமூக விமர்சனத்திற்கும் அரசியல் விமர்சனத்திற்கும் கும்பமுனி என்ற கற்பனைப் பாத்திரத்தைத் தம்

சிறுகதைகளில் பரவலாகப் பயன்படுத்தி உள்ளார். இச்சிறுகதையில் வரும் கும்பமுனி என்னும் வயதுமுதிர்ந்த தமிழ் எழுத்தாளர் மூலநோயினால் அவதிப்படுபவர். அவரிடம் ஆயிரம் சொற்களுக்கு மிகாமல் தீபாவளி மலருக்குக் கதை கேட்டு ஒரு கடிதம் வருகின்றது. மற்றொரு கடிதத்தில் படம் பார்த்துக் கதை எழுதும்படி பத்திரிகை ஆசிரியர் கேட்டிருந்தார். கும்பமுனி எழுத்தாளர் என்றாலும் அவர்தம் கடைசிக் கதையை இருபத்துமூன்று மாதங்களுக்கு முன்னர் எழுதினார். தற்பொழுது அவருக்குக் கற்பனை வறட்சி ஏற்பட்டு விட்டது. அவர் கதைப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் பின்வருமாறு எள்ளல் செய்கின்றார்.

முப்பது நாப்பது வருசத்துக்குப் பொறவு, காத்துலேவிட்ட குசுப்போல ஒண்ணுமில்லாமப் போறகதையளுக்காக இவ்வளவு செறையா? அதைக் கர்ப்ப சோகம்ங்கான். பிரசவ வேதனைங்கான். வலிய வலிய வார்த்தைகள்ளே வளர்க்கிறானுக. எப்படி வருது பாத்தேளா, வானாவுக்கு வானா? சும்மையா சொன்னான். சட்டியிலே இருந்தா ஆப்பையிலே வரும்னு... எவனும் பட்டினியாவே கெடக்கான் நீறு எழுதல்லேண்ணு... இல்ல மாரடச்சு செத்துப் போனானா? தாயுமானவன் சொன்னான், எல்லாம் யோசிக்கும் வேளையில் வயிறார உண்பதுவும் உறங்குவதுமாக முடியும்ணு? வயிறார எங்க உங்க? கும்பிக்குக் கூழுமில்லே, குண்டிக்குத் துணியுமில்லே! கட்டங் காப்பிக்கே வழியில்லே... இண்ணைக்கு, யாருவே கண்டா நகுலனை, மாதவனை, சார்வாகனை... நான் என்ன அஞ்சாங் கிளாஸ் ஆஜர் பொஸ்தகமாவே படிக்கேன்? இதுலே இலக்குங்கான், ஓவர்டேக் பண்ணியாச்சுங்கான் (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, கதை எழுதுவதன் கதை ப.39).

தமிழ்ப் படைப்பாளிகளும் எழுத்தாளர்களும் உண்ண உணவும், உடுத்த உடையும் இல்லாமல் வறுமையில் துயரப்படுகின்றனர். அவர்களின் நலவாழ்விற்கு எவ்வித வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்காத பத்திரிகையாளர்கள் அவர்களின் படைப்புக்களை மட்டும் தம் இதழ்களில் வெளியிட்டு பொருளீட்டி இலாபம் பெறுகின்றனர். புகழ்பெற்ற எழுத்தாளர்களிடம் படைப்புக்களைப் பெற்று வெளியிடும் அவர்கள், அத்தகைய எழுத்தாளர்களின் வறுமைத்துயரைப் போக்குவதற்கு முன் வருவதில்லை. நகுலன், மாதவன், சார்வாகன் போன்ற நல்ல தரமான படைப்பாளிகளை மறந்துவிட்டது தமிழ்ப்படைப்புலகம். படைப்பாளிகளுக்கு உணவளித்து உயிர்காக்க மறுக்கும் திறனாய்வாளர்களும் பத்திரிகைகளும் படைப்பு என்பது 'கர்ப்ப சோகம்" என்றும், 'பிரசவ வேதனை" என்றும் புகழ்பாடி, படைப்பாளிகளை ஏமாற்றி அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதை நாஞ்சில்நாடன் இக்கதையில் எள்ளி நகையாடுகின்றார்.

நாஞ்சில்நாடன் 'வங்கணத்தின் நன்று வலிய பகை" என்ற சிறுகதையிலும் கும்பமுனி என்ற பாத்திரத்தைப் படைத்து அப்பாத்திரப் படைப்பின் வாயிலாகத் தமிழ் எழுத்தாளர்களின் இரங்கத்தக்க அவலநிலையைக் குறிப்பிடுகின்றார். கும்பமுனி தனக்கு வரும் கடிதங்களுக்கு மறுமொழி (பதில் கடிதம்) எழுதமாட்டார். சம்பளத்துக்கு ஆள்வைத்து, தனக்கு வரும் கடிதங்களுக்கு எல்லாம் தட்டச்சுச் செய்து பதில்போடும் வழக்கமில்லை.

## தமிழ் எழுத்தாளன் வாழ்க்கை நிலையும் சமூக இருப்பும்

தமிழ் எழுத்தாளர்களின் வாழ்க்கை நிலையையும் சமூக இருப்பையும் நாஞ்சில் நாடன் 'கும்பமுனி முறித்த குடைக்காம்பு" என்னும் சிறுகதையில் யதார்த்தப் பார்வையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனுஷாதேவி காட்டாக்கடை ஆற்றில் குளிக்கும்போது, குஞ்சத் தம்பிரான் பாலராம இளைவர்மா கண்டு மோகித்து அவளை இளையராணி ஆக்கிக்கொண்டார். அவருக்குப் பக்கவாதம் வந்து படுத்தபோது இளைய ராணியின் செல்வாக்கும் குறைந்தது. ராணியின் அறுபத்து மூன்றாம் வயதில்

பரமார்த்தலிங்கம் அவளிடம் எடுபிடியாகப் போனான். அப்போது அவனுக்கு வயது பதினொன்று. உண்மையில் அனுஷாதேவி இளைய வர்மாவின் வைப்பாட்டியாக வாழ்ந்தவள். பரமார்த்தலிங்கம் இளைய ராணியின் வளர்ப்புமகன் ஏகப்பட்ட சொத்துக்களுக்கு அவனே வாரிசு. கும்பமுனி பரமார்த்த லிங்கத்தின் கடைசி மகளின் ஒரே வாரிசு என வரலாற்றுப் போக்கில் கதையை வளர்த்துச் செல்லும் நாஞ்சில்நாடன், கும்பமுனியை வறுமையில் வாடும் தமிழ் எழுத்தாளராகப் படைத்துள்ளார்.

பிள்ளைப் பூச்சி போன்றதோர் தமிழ் எழுத்தாளன், எவரும் சீந்து வாசற்றவன், கேவலம் ஒரு சாகித்ய அகாதமி, பத்மஸ்ரீ, கலைமாமணி கூட அடித்துமாற்ற யோக்கியதையும் சாமர்த்தியமும் இல்லாதவனுக்கு இத்தனை கோடிகளா?... உடுதுணிக்கு மறுதுணி இல்லாதவன் பத்து ஆண்டுகளில் பதினாயிரம் கோடி சேமிப்பதும் சாத்தியம்தானே, இந்திய சனநாயக சோசலிச முற்போக்கு சமூக நீதிக் குடியரசில்?... இந்திய நாட்டின் இனமான தானைப் புரட்சி அடலேறுகளின் பினாமிகளுக்கு தலைக்கு இரண்டு மாநிலங்கள் வாங்கும் அளவுக்கு காசு இருக்கிறது... பணம் எந்த வடிவத்தில் சேமிதமாகிறது என்பது உங்களுக்கும் எனக்கும் தெரிய வாய்ப்பில்லை (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, கும்பமுனி முறித்த குடைக் காம்பு, பக்.76-77) என்று கும்பமுனி கூற்றில் தமிழ் எழுத்தாளர்களின் வாழ்க்கை நிலையையும், அரசியல் வாதிகளின் பினாமிகள் சொத்துச் சேர்ப்பதையும் நாஞ்சில்நாடன் கிண்டல் செய்கின்றார்.

தமிழ் எழுத்தாளன் தங்கப்பூண் போட்ட சந்தன மரக் கைத்தடியா ஊன்றி நடக்க முடியும்? பிழைப்புக்காக அவனே ஓர் கைத்தடி ஆகும் காலக்கட்டாயம் (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, கும்பமுனி முறித்த குடைக் காம்பு, ப.79) எனவும் நாஞ்சில் நாடன் தமிழ் எழுத்தாளர்களின் அவல வாழ்க்கையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

**தேர்தல் ஆணையம் - தேர்தல் நடைமுறைகளைச் சாடல்**

நாஞ்சில்நாடன் 'தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக்கடிதம்'' என்னும்சிறுகதையில் தேர்தல் ஆணையத்தின் இன்றைய நடைமுறைச் செயல்களையும், சனநாயகத்தில் இன்று கேலிக்கூத்தாக நடைபெறும் தேர்தல்களையும் எள்ளி நகையாடுகின்றார். ஆறுமாதத்திற்கு முன்பு கழுதைச்சந்தை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காலையில் நடக்கப் போகும் போது கொடி அறுகம்புல் தடுக்கி விழுந்து மூக்கா மண்டையில் அடிபட்டு விழுந்த இடத்திலேயே மரணம் அடைந்தார்; அவர் ஆளுங்கட்சிக்காரர்; அந்தத் தொகுதிக்குப் போனமாதம் இடைத்தேர்தல் வந்தது.

அதே சாதியினர், அதே கட்சியினர், அதே வாக்காளர், அதே வாக்குச் சாவடிகள், வாரந்தோறும் சந்தைக்கு வரும் அதே கழுதை வியாபாரிகள். அதே மனோபாவம். என்றாலும் அந்த இடைத்தேர்தல் வெற்றியில் தான் இந்தியாவின் எதிர்காலமே நூலிழையில் நான்று கிடக்கிறது என்று ஆளும், எதிர், உதிரிக் கட்சிகள் யாவும் பல்லும் நகமும் கொண்டு போரிட்டுக் கொண்டிருந்தனர். பணம், பதவி, அதிகாரம், சாதி என்பன அரசியலில் அணு ஆயுதங்கள். முன்பானால் வெளியே தெரியாமல் வீசலாம். இன்று தெரிந்தே வீசலாம், முகத்துக்கு நேரே. செய்தித்தாள்வாசிக்கவாசிக்ககும்பமுனிக்கு குருதி கொதியாய்க் கொதித்தது. கொதிப்பு, குளிக்க ஒருபானை வெந்நீர் கூடச் சூடாக்க இயலாது என்று அவருக்குத் தெரியும். என்றாலும் கழுதை வியாபாரம் என்ற ஒரு தொழிலும், மானாவாரிப் பயிர்கள் விவசாயமும் பிறகு விறகு பொறுக்குவது, மாட்டுச் சாணம், பன்றி விட்டை, கழுதை லொத்தி சேகரிப்பது போன்ற உபதொழில்களும் கொண்டு தொகுதி வாக்காளரின் சராசரி தின வருமானம் நாற்பத்தாறு ரூபாயைத் தாண்டாத நிலையில் ஒரு சின்ன வறுமைப்பட்ட தொகுதியின் இடைத்தேர்தலுக்கு இத்தனை பணம், பட்டாளம், பாவங்கள்

என்பது கும்பமுனியின் சுத்தசுயம்பு மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கு எதிராக இருந்தது (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, தேர்தல் ஆணையத்துக்கு திறந்த வெளிக் கடிதம், பக்.113-114) எனவே கும்பமுனி மனம் வெதும்புகின்றார்.

சனநாயக, சமத்துவ மதம், இனம், மொழி, செல்வச் செழிப்பற்ற கண்ணகி மாநிலத்தின் சட்டத்துக்குப் பணிந்து நடப்பவனும், வருமானமே இல்லாத எழுத்தாளனும், சாதாரணக் குடிமகனுமாகிய கும்பமுனி தேர்தல் ஆணையத்துக்குத் திறந்தவெளிக் கடிதம் ஒன்றை எழுதுகின்றார். அக்கடி தத்தை அவர் எழுதும்போது - நடக்கும் உரையாடலில் தவசிப்பிள்ளையும் பங்கேற்கின்றனர்.

இந்த நாட்டில் பெரும்பான்மையினருக்கு நிரந்தர முகவரி கிடையாது என்பதால் வாக்காளர் பட்டியலில் பெயர், வேட்பாளரது சொத்து விவரங்கள், முன்மொழிதல், வழிமொழிதல், வருமான, மத, இனச் சான்றுகள் என எந்தச் சிக்கலும் தேவையற்றது. வேட்புமனுக் கட்டணத்தை இப்போது உள்ளதைவிட நூறு மடங்கு உயர்த்தி அது திருப்பித்தரமாட்டாது எனத் தீர்மானிக்கலாம். சட்ட மன்ற உறுப்பினர் பதவியை டெண்டர் விட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் டெண்டரில் குறிப்பிட்டிருந்தால் தொகுதியை வயதால் மூத்தவருக்கோ, சினிமாத் தொடர்பு உள்ளவருக்கோ, தாய்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கோ, தாய்மொழியில் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டியவருக்கோ முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கலாம்.

... தேர்தல் ஆணையம் தலையிட்டு வாக்குச் சீட்டின் அதிகபட்ச அல்லது குறைந்த பட்ச விலையை முன்கூட்டியே தீர்மானம் செய்துவிடலாம். வாக்காளருக்கு விநியோகமாக வேண்டிய பணத்தை ஆணையமே பெற்று நியாய விலைக் கடைகள் மூலம் மொத்தமாக விநியோகிக்கலாம். மக்கள் தொகையை மாநில, சாதிவாரியாகத் துல்லியமாகக் கணக்கிட்டு சாதிக்கேற்ப உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கலாம். ... ஆண்டின் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களிலும் தினம் இருபது தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்தலாம். வேற்று மாநிலக் காவலர்களைத் தேர்தலுக்கென நியமிக்கலாம். கள்ள வாக்காளர்களை Justice of Peace என்பது போன்ற கௌரவப் பதவியாக அங்கீகரித்து அரசே ஒரு பட்டியலை வெளியிட வேண்டும். கள்ள வாக்காளர் வாரியம் அமைப்பது அவசியமானது. அதற்கு தேர்தலில் தோற்றுப்போன கட்சிக்காரரை நியமிப்பதே சட்ட ரீதியானது. தேர்தல் செலவுகளைக் கணக்கில் கொண்டு மொத்த சட்டமன்ற உறுப்பினர்களையும் மத்திய தேர்தல் ஆணையமே நியமனம் செய்து விடலாம். தேர்தலில் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும் (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, தேர்தல் ஆணையத்துக்கு திறந்த வெளிக் கடிதம், பக்.114-121). இவ்வாறு இன்றைய தேர்தலில் நடைபெறும் ஊழல்களையும், அதைக் கண்டும் காணாத தேர்தல் ஆணையத்தையும் நாஞ்சில் நாடன், தமிழ் எழுத்தாளர் கும்பமுனி என்ற பாத்திரத்தைக் கொண்டு எள்ளி நகையாடுகின்றார். தேர்தலில் வாக்களிக்க மக்கள் இனாம் பெறுவதையும், இனாம் கொடுத்து வாக்குகளைப் பெறும் அரசியல் கட்சிகளையும் நாஞ்சில்நாடன் இச்சிறுகதையில் வன்மையாகச் சாடியுள்ளார். ஊடகக் காரர்களும் தேர்தல் நேரத்தில் கருத்துக் கணிப்புக் கூறுபவர்களும் அரசியல் கட்சிகளின் வன்முறையாளர்களால் கொடூரமாகத் தாக்கப்படுகின்றனர்.

நீங்கள் ஊடகங்கள் பற்றியும் கவன்று தங்கள் பொன்னான உள்ளத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம். அரசியல்காரர்கள், சினிமாக்காரர்கள், பெருமுதலாளிகள், வியாபாரிகள், ஊடகக்காரர்கள் எல்லோரும் ஒன்றுக்குள் ஒன்றான ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் தான். சொக்காரர்கள், தர்ப்பைப் புற்கள்,... இதனை எழுதுகிற கும்பமுனியாகிய

நான் போக்கும் புகலும் அற்றவன், வயோதிகன், நோய்ப் பட்டவன், குடும்பம் குட்டி கிடையாது. 'ஊரிலேன், காணி இல்லை, உறவு மற்றொருவரில்லை" அடித்துப் போட்டாலும் ஆசிட் வீசினாலும் நள்ளிரவில் ஆட்டோ வந்தாலும் ஏனென்று கேட்க நாதி இல்லாதவன். இரண்டு செல்லத் தட்டுகளையே என்னால் தாங்க இயலாது. எனவே எனது முகவரியைத் தாங்கள் ரகசியமாக வைத்துக் கொள்ளவேண்டும். முக அடையாளம் எனக்கு ஏற்கனவே கிடையாது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, தேர்தல் ஆணையத்துக்கு திறந்த வெளிக் கடிதம், பக். 122- 123). இவ்வாறு நாஞ்சில்நாடன் தேர்தலில் நடைபெறும் அனைத்து வகையான சீர்கேடுகள், ஒழுக்கப் பிறழ்வுகள், வன்முறைகளை இச்சிறுகதையில் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும் இவற்றைச் சரிசெய்ய இயலும் என்ற நம்பிக்கை அவரிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

### அரசு அலுவலகங்களில் விழாக்கள் - குடியரசு தினவிழா

நாஞ்சில்நாடன் 'சூடிய பூ சூடற்க" என்னும் சிறுகதையில் அரசு அலுவலகங்களில் சம்பிரதாயமாகவும் சடங்காகவும் கொண்டாடப்படும் குடியரசு தினவிழாவினைச் சாடுகின்றார். அரசு விழாக்களுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எனினும் விடுமுறை விடப்படுகின்றது. நாள்தோறும் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை என்றாலும் கூட, அலுவலர்களுக்கு மகிழ்ச்சியே. சில அரசு விழாக்களுக்கு முன்னும் பின்னும் மூன்று நாட்கள் மதுக்கடைகளை மூடுவதே அவர்களுக்குக் கவலை.

பூமிநாதன் அரசு அலுவலகம் ஒன்றில் கடைநிலை ஊழியன். அரசு விடுமுறை நாட்களில் அவனுக்கு வேலையும் வருமானமும் உண்டு. குடியரசு தினவிழாவிற்கு, முதலில் அட்டைப்பெட்டிக்குள் தலைமறைவாக இருக்கும் காந்தி படத்தை வெளியே எடுத்து துடைத்து வைக்க வேண்டும். பின்பு மடித்து வைத்திருக்கும் தேசியக்கொடியை உதறி பாச்சா பல்லி இருந்தால் ஓட்ட வேண்டும். பிறகு கொடிகட்டும் வெள்ளை முறுக்குக் கயிறு, மலர்கள் வைக்கும் நீள் சதுரத் தட்டம், மிட்டாய் வைக்கும் தட்டம் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி வைக்க வேண்டும். இதெல்லாம் முந்தியநாள் வேலைகள்... வழக்கம்போல செலவுக்கு, முன்பணம் வாங்கிக் கொள்ளச் சொன்னார் அதிகாரி. கொண்டாட்ட தினத்தன்று வெள்ளைச் சட்டையும் வெள்ளைக் கால் சராயுமாக துடிப்பான சீருடையில் இருக்க வேண்டும் பூமிநாதன். உத்தேசமாக மலர்கள், மாலைகள், செண்டுமிட்டாய், இனிப்பு, முந்திரிப் பருப்பு, பழங்கள், பானங்கள் என ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் ஆகும். தனக்கென நூறு இருநூறு ரூபாய் ஒதுக்கிக் கொள்வார் பூமிநாதன். இப்போதைய அதிகாரி கணக்கு எழுதும்போது ஐந்நூறு ரூபாய் சேர்த்து எழுதச் சொல்கிறார். அரண்மனைக்கு ஆயிரம் கடா சென்றாலும் குடியான்தான் தெண்டமிறுக்க வேண்டும் (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, சூடிய பூ சூடற்க பக்.91-92).

இது குடியரசுதினவிழா நடைமுறை. இது இவ்வாறு இருக்க அரசு அலுவலகங்களில் ஊழலும் கையூட்டுப் பெறுவதும் தவிர்க்க இயலாத நடைமுறை. ஆயினும் யாரும் யாரையும் காட்டிக் கொடுப்பதில்லை. அன்றைய தினம் மதுக் குடிப்பதும் நடைமுறைகளில் ஒன்றே. குடிக்கு நன்றி தெரிவித்து எல்லா மக்களும் 'குடிமக்கள்" என்று கருதி அரசு ஆண்டுக்கு ஒருநாள் குடியரசு தினவிழாக் கொண்டாட்ட விடுமுறை அளிக்கின்றது.

காலையில் ஏற்றிய தேசியக்கொடியை மாலையில் சூரியன் மறைவிற்குள் இறக்க வேண்டும். ஆட்சிமன்ற உறுப்பினர் ஏற்றிய

கொடியை கடைநிலை ஊழியர் இறக்கி விடலாம். கொடியேற்றத்திற்கு மட்டுமே விழா. அலுவலக நாட்கள் பணியாளர்கள் பத்து மணிமுதல் பதினொன்றே கால்வரை வந்து போகலாம். பூமிநாதன் ஒன்பதரைக்கே அலுவலகத்தைத் திறக்க வேண்டும். அக்காலத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி என்.ஜி.ராமசாமி தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வைக்கப் போராடினார்.

அவருடைய கோஷம் 'தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்" என்பது. இன்று சங்கங்கள் யாவும் தங்கம் செய்து கொண்டிருக்கின்றன. அன்று மில் முதலாளிகள், சங்கத்தை உடைக்க என்.ஜி.ஆருக்கு சொந்தமாக மில் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். மில்லுடன் பெண்ணும் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். சாதிச் செல்வாக்கு எனும் பூமாலை சூட்டப் பார்த்தார்கள். எதற்கும் இணங்காதபோது எலும்பை உடைப்பதும் உயிரைப் பறிப்பதுமன்றி முதலாளிகளுக்கு மார்க்கமென்ன? பிறகொரு வசதியான நாளில் மருத்துவமனையோ, பாடசாலைகளோ, விளையாட்டு அரங்கங்களோ கட்டிக் கொடுத்தால் போயிற்று. ஜனாபதிகள் இருக்கவே இருக்கிறார்கள். ஒரு வேலையும் இல்லாமல் திறப்பு விழாக்கள் செய்வதற்கும் கேடயங்கள் வழங்குவதற்கும் (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, சூடிய பூ சூடற்க, ப.95) என்று இன்றைய அரசியல் நிலைப்பாட்டையும், தியாகிகளின் தன்னலமற்ற பொதுச்சேவை மறக்கப்பட்டதையும் நாஞ்சில் நாடன் நினைவுபடுத்துகின்றார்.

## இசைமேதையின் மனிதாபிமானமற்ற செயலும் மரணமும்

நாஞ்சில்நாடன் 'பழிகரப்பு அங்கதம்" என்னும் சிறுகதையில் இசைமேதையின் மனிதாபிமானமற்ற செயலையும், அவரது மரணத்தையும் பழிகரப்பு அங்கதமாகப் பதிவு செய்திருக்கின்றார். முல்லைப் புங்கனூர் சங்கரலிங்க அண்ணாவி இசைப் பரம்பரையில் வந்தவர் இசை மேதை பஞ்சலிங்க மங்கலம் பாவநாசம். அவரை 'இசைப்பிரியர் பஞ்சம்" என்றே அழைப்பர். அவர் எண்பதுக்கும் மேற்பட்ட இசைப் பேழைகளை வழங்கியவர். ஆயினும் அவர் இசைமேடையில் பாதிக்குப் பாதி தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுபவர். பஞ்சம் ஒரு இசைக்கச்சேரிக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊதியம் வாங்கினார். அவர் கோவையில் சந்தனப்பள்ளி சத்யவீர அன்மை நாயக்கர் விருந்தினர் விடுதியில் தங்கி இருந்தார்.

அவரைக் கோவை இசைக்கல்லூரியில் விரிவுரை செய்வதற்கு அழைப்பதற்காக இசைக்கல்லூரித் தலைவர் கோபிகிருஷ்ண பாகவதர் நேமிநாதனை அழைத்துக்கொண்டு செல்கின்றார். பஞ்சம் மாணவர்களுக்காக, பத்தாயிரம் ரூபாய்க்கு விரிவுரையாற்ற முடியாது என்றும், ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டுமெனவும் கேட்கின்றார். நேமிநாதன் பேய் அறைந்தார் போல் திரும்புகின்றார். மறுநாள் பாலக்காட்டில் கச்சேரியை முடித்து விட்டு உணவருந்தி காண்டசா காரின் முன்னிருக்கையில் தூங்கியவாறு பஞ்சம் விருந்தினர் விடுதிக்குத் திரும்புகின்றார்.

நள்ளிரவு பன்னிரண்டரை மணிக்கு க.க.சாவடி தாண்டி, மரப்பாலமும் தாண்டி மதுக்கரைக்கு சற்று முன்னாள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரெய்லர் லாரி ஒன்றின் கீழே அதிகவேகமாக காண்டசா புக முயற்சி செய்ததில் பஞ்சம் தலையுடைந்து தலத்திலேயே குருதிப் பெருக்கில் கிடந்தார். தப்பிய சாரதி பாக்கியநாதன் தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்து நகரின் பிரதான மருத்துவமனை செல்லும் முன் காலம் காத்து நிற்காமல் நகர்ந்து போய்விட்டது (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, பழிகரப்பு அங்கதம், ப.142) இவ்வாறு நாஞ்சில்நாடன் இசைமேதையின் மனிதாபிமானமற்ற செயலைச் சுட்டிக் காட்டி, அதனால் அவருக்கு ஏற்பட்ட விபத்து மரணத்தையும் குறிப்பிடுகின்றார். புகழும் பெருமையும் செல்வாக்கும் இருப்பினும்

மனிதனுக்கு மனிதநேயம் வேண்டும் என்கின்றார் நாஞ்சில்நாடன்.

**சாத்தாங் கோயில்களில் பூசாரிகளாகப் பணியாற்றும் நம்பியார்களின் அவலவாழ்க்கை**

நாஞ்சில்நாட்டில் பெருமளவில் சாத்தாங் கோயில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களில் 'நம்பியார்" என்னும் இனத்தவர் பூசாரிகளாகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களது அவல வாழ்க்கையை நாஞ்சில் நாடன் 'பரிசில் வாழ்க்கை" என்னும் சிறுகதையில் நுட்பமாகப் பதிவு செய்திருக்கின்றார். 'சாஸ்தா" என்பதன் தமிழாக்கமே 'சாத்தா" என்பது.

கன்னியாகுமரிப் பகுதிகளிலும் கேரளத்தின் திருவிதாங்கூர் பகுதிகளிலும் தர்ம சாஸ்தா ஐயப்பன் கோயில்களும் சாத்தாங் கோயில்களும் எரிமேலி, பந்தளம், குளத்துப்புழை, செங்கோட்டை தாண்டிய சிற்றூர்களின் கரையிலுள்ள ஆரியங்காவு, அச்சன்கோயில் ஆகிய பகுதிகளில் பிரபலமானவை. நாஞ்சில் நாட்டின் சிற்றூர்களிலும் பெரிய பகுதிகளிலும் எங்கோடி கண்டன், எருக்கலை உடையார், மணிகண்டன், சேரவாதில், நீர்நிறை காவு கொண்டன், தென்கரை மகராசன், பரக்கோடியன் கண்டன் ஆகியவை பெயர் பெற்ற சாத்தங் கோயில்கள் ஆகும். இவை முன்னொரு காலத்தில் சமணர்களின் வழிபாட்டுத் தலங்களாக இருந்தன. வலுவும் வழிபாட்டுத் தீவிரமும் இழந்துபோன சாத்தாக்களுக்கு பூணூல் அணிந்த வேளார், குலாலர், குயவர், கொசவர் முதலில் பூசை செய்தனர். சில இடங்களில் நம்பியார் இனத்தவர் பூசை செய்தனர். இவர்களைப் 'பட்டர்", 'ஆதி சைவர்", பார்ப்பனர்களின் உட்பிரிவு எனப் பலவாறு குறிப்பிடுவர்.

சாத்தான்களைப் 'பூவத்தான்" என்றும் 'பூதத்தான்" என்றும் குறிப்பிடுவர். இதன் உருவங்கள் கவிழ்த்து வைத்த மைசூர் சருவம் போன்ற கற்சிலைகள்; பலி பீடங்களின் பெரிய வடிவம். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சாதி பார்த்துப் பழகும் பெண்களை நாஞ்சில்நாடன் இக்கதையில் சுட்டிக்காட்டுகின்றார். பாலாம்பாள் என்ற மாணவி பிராமணாள். சிவகாமியும் சீதையும் வேறு சாதிப் பெண்கள், பாலாம்மாள் அப்பெண்களிடம் பேசுவதும் இல்லை. நட்புக் கொள்வதும் இல்லை.

பாலாம்பாளின் தந்தை சிவராம நம்பியாருக்கு தினம் ஒரு வேளை பூசைக்கென மூன்று கோயில்களில் முறை. அதில் சாயரட்சை பதிவு சாத்தாங்கோவிலில் மட்டுமே. அவர் வறுமையில் வாடுபவர். அவருக்கு மாதம் ஏழு மரக்கால் நெல் சம்பளம்; விளக்கெரிக்க நல்லெண்ணெய் மற்றும் நைவேத்தியம் பொங்க பச்சரி சிக்காக கூடுதலான ஏழு மரக்கால் நெல். மற்றதெல்லாம் சாத்தாபாடும் நம்பியார் பாடும். வயற்காட்டில் வேலையிருந்தால் சாத்தாங்கோயிலுக்குப் பண்ணையார் வந்து கும்பிட்டு விபூதி பூசிக்கொண்டு போவார். மற்றபடி சாத்தாவுக்கென கொடை, சிறப்பு, ஊட்டு, நம்பிரான் விளையாட்டு, வேட்டை எதுவும் கிடையாது. எனவே சிவராம நம்பியாருக்கு வேறுவருமானம் இல்லை. வீட்டில் அரிசி இல்லை. வயற்காட்டு நந்தவனத்து சாத்தவுக்கு சாயரட்சை பூசை.

பூசையை முடித்து, மணியடித்து சூடம் காட்டுபோது பண்ணையார் படியேறி வந்தார். பவ்யமாக தீபம் காட்டி, விபூதி கொடுத்தார் நம்பியார். 'நம்பியாரே, பிரசாதமா நைவேத்தியச் சாதம் கொஞ்சம் தாரும்ஓய்" என்றார்பண்ணையார். நம்பியாரக்கு அன்மைய கோசமும் பிராணமய கோசமும் பதறிச் சிதறியது. 'பிள்ளைவாள், வெறும் பச்சரிசிச் சாதம், வெல்லம், தேங்காய் முறி கூட இல்ல" … … … …

'என்னவே? வெளையாட்டக் காட்டுகேரா? கடவுளை ஏமாத்தலாமா ஓய்? நல்லாருக்கா ஓய்? நீங்களே இப்படிச் செய்தா கடவுளுக்குப்பொறுக்கமாஓய்?" தடாலென நெடுஞ்சான் கிடையாக விழுந்தார் நம்பியார். குரல் கம்மி விம்மி உடைந்து கசிந்து ஒழுகியது. 'தப்புத்தாம்பயா, தாரித்

திரியம்யா, இனி இப்பிடி நடக்காதுய்யா" நம்பியாருக்கு எழுந்திருக்க மனமில்லை... எழுந்துகொள்ள மனமின்றிக் கிடந்தார் நெடுநேரம் (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, பரிசில் வாழ்க்கை, பக்.71-72). இவ்வாறு நாஞ்சில்நாட்டுச் சாத்தாங் கோயில்களில் பூசாரிகளாகப் பணியாற்றும் நம்பியார்களின் வறுமையை, தரித்திரத்தை, அவலத்தை நாஞ்சில் நாடன் மனிதாபிமானத்தோடு வெளிப்படுத்தியுள்ளார்.

### சிறுதெய்வ நெறியும் பெருந்தெய்வ நெறியும்

நாஞ்சில்நாடன் "சங்கிலிப் பூதத்தான்" என்னும் சிறுகதையில் சிறுதெய்வ நெறியையும் பெருந்தெய்வ நெறியையும் ஒப்பிட்டு, தமிழ் மண்ணில் தமிழ்மக்களுக்கு பெருந்தெய்வ நெயியே சிறந்தது என்றும், உகந்தது என்றும் கூறுகின்றார்.

நாட்டார் தெய்வங்கள் இருபத்தேழு என்பது வழக்காறு. இந்த இருபத்தேழு தெய்வங்களும் இடத்திற்கு இடம் வேறுபடுவதும் உண்டு. இந்த இருபத்தேழு தேவதைகளின் நிரந்தர உறுப்பினர்களில் ஒருத்தன் சங்கிலிப் பூதத்தான். சங்கிலிப் பூதத்தானுக்குப் பரமசிவனும் பார்வதியும் பெருநிதியம் என்ற வரத்தை அருளினர். முக்கண் முதல்வன் சங்கிலிப் பூதத்தானுக்குப் பெரியதோர் கடாரம் நிறையத் தங்கக் கட்டிகளை வழங்கினான். அவனது இருகரங்களிலும் வளையங்கள் மூலம் அந்தக்கடாரம் பிணைக்கப்படுகின்றது. கண்ணப்ப பணிக்கரின் அறுத்தடிப்புக் களத்தில் இருபத்தேழு தேவதைகளுக்கும் பீடங்கள் இருந்தன. தீண்டக்காரிகள் (தீட்டுடைய பெண்கள்) அப்பீடங்களின் முன்னால் நடமாடுவதில்லை. சங்கிலிப் பூதத்தான் உயிர்ப்பலி கேட்கும் தேவதை அல்ல. அரிசிப் பாயாசம் கேட்கும் சைவச்சாமி. பால்போல் நிலவு தோன்றும் காலத்திலேயே சங்கிலிப் பூதத்தான் உலாப்போவான். கனத்த கடாரத்தை இழுத்துக் கொண்டு உலாப்போவது சங்கிலிப் பூதத்தானுக்குச் சிரமமாக இருந்தது.

நல்லவனிடம் தங்கக் கடாரத்தை ஒப்படைக்க முடியாமல் சங்கிலிப் பூதத்தான் தவிக்கின்றான். திருவோட்டைத் தலைக்கு வைத்து வீட்டுப்படிப்புரையில் படுத்திருந்த பண்டாரம் ஒருத்தன் தங்கக் கடாரத்தை வாங்க மறுக்கின்றான். ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாகக் கேட்கின்றான். வண்டி மலைச்சி என்ற சிறுதெய்வம், சங்கிலிப் பூதத்தானிடம் கைலாயம் சென்று சிவனிடம் அந்தப் பெருநிதியத்தை ஒப்படைக்குமாறு கூறுகின்றான். வழிமறந்து போனது என்கின்றான் பூதத்தான்.

கூடவே வேறொன்றும் தோன்றியது அவனுக்கு. கைலாயம் போய்விட்டால் திரும்பி வருவோமோ, மாட்டோமோ இங்கு கண்ணப்ப பணிக்கரின் களத்துப் பீடத்தை வேறு எவரும் ஆக்கிரமிப்பு செய்து கொள்ளமாட்டார்களா? மேலும் தை அமாவாசைக்கு இன்னும் ஆறேழு நாட்களே இருந்தன. கடைசியாக ஒரகப்பை அரிசிப் பாயசம் குடித்துவிட்டுத் தீர்மானிக கலாம் என்றும் தோன்றியது (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, சங்கிலிப் பூதத்தான், ப.134). இவ்வாறு நாஞ்சில் நாடன் சொந்த மண்ணில், மண்ணின் மரபிற்கு ஏற்பத் தோன்றிய சொந்த ஊர்த் தெய்வமே தமிழர்களுக்குச் சிறந்தது. விண்ணில் வாழும் பெருந்தெய்வங்களை தமிழ்மக்கள் நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாது என்னும் சிந்தனையை நாஞ்சில் நாடன் இச்சிறுகதையில் முன் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### எல்லைக்கோடுகள் தேவையற்றவை. "அனைவரும் இந்தியரே"

நாஞ்சில் நாடன் 'எல்லைக் கோடுகள் தேவையற்றவை; அனைவரும் இந்தியரே" என்ற சிந்தனையை "வளைகள் எலிகளுக்கானவை" என்னும் சிறுகதையில் வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்தியாவில் சட்டீஸ்கர் மாநிலத்தின் எல்லையோரம் மராத்திய மாநிலத்தின் கற்சிரோலி என்ற

மாவட்டம் அமைந்துள்ளது. நாக்பூர், சந்த்ரப்பூர்போல கற்சிரோலி வெயிலும் குளிரும் கொண்ட வறண்ட பூமியாகும். அம்மாவட்டைச் சேர்ந்த விவசாயிகள் புகைவண்டியில் புனிதப் பயணமாக இந்தியாவின் புகழ்பெற்ற திருக்கோயில்களைத் தரிசித்து வழிபடுவதற்காகவும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பாவங்களைத் தொலைப்பதற்காகவும் பயணிக்கின்றனர். அவர்களிடம் இரயில் கட்டணமாக தலைக்கு ஐந்நூறு ரூபாய் வசூலிக்கப் படுகின்றது. உணவு அவரவர் பாடு; அவர்கள் ரயில் நிலையங்களில் ஆளற்ற பிளாட்பாரங்களில்தங்கிக் கொள்கின்றனர். பயணிகளின் சுற்றுப்பயண சலுகை ரயில் பயணச்சீட்டு மொத்தமாக நேதாவிடம் (தலைவன்) இருந்தது. அவர்கள் நான்கு நாட்களுக்குப் பிறகு திருப்பதி திருமலைக்கு வருகின்றனர். அவர் கன்னியாகுமரி வந்து தமிழர்களிடம் அடிபட்டு ரத்தக் கறையோடு திரும்புகின்றனர்.

மாவட்ட ஆட்சியர் வந்தார். அவர் பர்பனி மாவட்டத்து மராத்தியர். “காய் சாப், அமிலோக் பிக்காரி ஹை கா? அம்சக்டே டிக்கிட் நைகா? அமிலோக் கூஸ் காத்தூஸ்கா?” “திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தனர். நாங்கள் பிச்சைக்காரர்களா? நாங்கள் டிக்கெட் வாங்கவில்லையா? நாங்கள் மலம் தின்கிறோமா?”... நேதா கையில் மொத்தப் பயணிகளுக்குமான வட்டச் சுற்றுச் சலுகை பயணச் சீட்டு இருந்தது.

‘நாங்க ஏழைங்க சாப். கற்சிரோசி விவசாயிங்க. வித்தவுட் பிச்சைக்காரங்க இல்லே. போன வருசம் காசி போனோம். அதுக்கு முந்தி காளிகட் போனோம். கன்யாகுமரி வந்து நாங்க ரத்தக் கோறையோட போறோம்... ஏ பராபர் ஹை கா? துமி சாங்கா?... இரயில் ஒன்றரை மணிநேரம் தாமதமாகக் கிளம்ப யத்தனித்தது... பழைய வேட்டியை வைத்து மூடிப் பொரிந்து வைக்கப்பட்டிருந்த பெரிய செம்புப் பானையை நகர்த்தி உடையாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த முறுக்கை எடுத்து மாலையப்பன் முதலில் மகாதேவ் தெல்கேயிடம் நீட்டினார். ரயில் நகர்ந்தபின்வழியினுப்பவந்த இருவர்பேசிக் கொண்டு போனார்கள்.

‘காஞ்ச ரொட்டியைத் தின்னுக்கிட்டு ஊரலே கெடக்காம, பொறப்பிட்டு வந்திருக்கானுகோ - ஊற நாற அடிக்கதுக்கு” அவர்கள் மேற்கில் மேலாங்கோரும் கிழக்கில் முப்பந்தலும் தாண்டியதில்லை. தெற்கே கன்னியாகுமரிக் கடலையும் வடக்கே காளிகேசஞுஞ்ஞீ 21நூம் மலைகளையும் அவர்களால் தாண்டவும் முடியாது (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, வளைகல் எலிகளுக்கானவை, பக்.27-28) இவ்வாறு மாநில இன எல்லைகளை வகுத்துக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டால் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டமைக்க முடியாது என்பதையும், எல்லைப் பிரிவினைகள் ஒருதேசத்து மக்களுக்குள் கூடாது என்பதையும், ஒரு நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் பார்த்தால்தான் விசாலமான சிந்தனை வளரும் என்பதையும் நாஞ்சில்நடன் இந்தக் கதையில் வலியுறுத்திக் கூறியுள்ளார். மனிதன் எம்மதத்தவனாகவும் இருக்கலாம் - ஏழையாக இருக்கக் கூடாது.

நாஞ்சில் நாடன் “கடவுளின் கால்” என்னும் சிறுகதையில் மனிதன் இந்து, இசுலாமியம் மற்றும் எம்மதத்தவனாகவும் இருக்கலாம். ஆனால் ஏழையாக இருக்கக் கூடாது என்னும் சிந்தனையை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இச்சிறுகதையில் வரும் விற்பனைப் பிரதிநிதி சூரத்திலிருந்து திரும்புவதற்கு ரயில் நிலையத்தில் காத்திருக்கின்றான். அவன் நவ்சாரிக்கு விற்பனை நிமித்தமாகச் சென்றிருக்கின்றான். காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலம் மதுவிலக்கு மாநிலம் என்றாலும், அங்குத் தாராளமாக மது விநியோகம் இருப்பதைக் கண்டு அவன்

ஆச்சரியப்படுகின்றான். நமது நாடு சட்டத்தின் பாதுகாப்பில் உள்ள ஒட்டைகளில் உயிர் வாழ்கின்றது. சூரத்தில் அவன் வந்த ரயிலில் ஒரு பிச்சைக்காரன் வருகின்றான். அவனுக்கும் விற்பனைப் பிரதிநிதிக்கும் நடக்கும் உரையாடல் பகுதி வருமாறு:

"கால் ஏன் இப்டி ஆச்சு?" 'பான் கா துக்கான் வச்சிருந்தேன். கடையையும் வீட்டையும் கொளுத்தீட்டாங்க. ஒரு கையும் போச்சு காலும் போச்சு. எல்லாம் ஊப்பர் வாலோக்கா மெகர்பானி"... ... ... 'யாரு கேக்க முடியும்? இந்து வானா என்னா இஸ்லாம் ஆனா என்னா? ஏழையா இருக்கப்படாது"... ... பத்து ரூபாய் கொடுத்தேன். வாய்விட்ட சிரிப்பிலே பளீரென ஆரோக்கியமான பற்கள். பன்வேல் ஸ்டேஷன் நெருங்கிக் கொண்டிருந்தது. எழும்போது மறுபடியும் அவன் காலைப் பார்த்தேன். 'என் காலு போனாப் போகுது சாப். கடவுளுக்கு காலை வெட்டாம இருக்கணும்". ஏழையின் சிரிப்பே இறைவனின் சிரிப்பெனில் ஏழையின் கால்களும் இறைவனின் கால்கள் தாம். (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, கடவுளின் கால் ப.51)

இந்த உரையாடல் பகுதியில் நாஞ்சில் நாடன் வன்முறைக்குப் பலியாகும் அப்பாவி மக்களின் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கின்றார். மனிதன் எம்மதம் என்பது பெரிதல்ல; அவன் பணம் படைத்தவனாக இருக்க வேண்டும். அவனை எந்த வன்முறையும் பாதிக்காது. நாட்டில் நடைபெறும் வன்முறைகளில் அப்பாவி ஏழை மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்கின்றார். பிச்சைக்காரர்களை எள்ளல் செய்யாமல், அவர்கள் வாழ்க்கைப் பின்புலத்தை எண்ணிப் பார்க்கின்றார்.

## சென்னையில்லைன் வீடுகளில் குடியிருப்போர் நிலை - தேசிய ஒருமைப்பாடு

சென்னை போன்ற பெருநகரங்களில் லைன் வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்போர் நிலையை நாஞ்சில்நாடன் 'கொங்குதேர் வாழ்க்கை" என்னும் சிறுகதையில் விளக்கியுள்ளார். லைன் வீடுகள் கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்னும் எண்ணிக்கையில் இருந்தால் வாடகைக்கு வீடு கிடைப்பது சிரமமே. இச்சிறுகதையில் வரும் நாயகன் லையன் வீட்டின் வாடகைக் குக் குடியிருப்பவன். அவன் எழுத்தாளன். அவன் யாரோடும் அதிகமாகப் பேசு வதில்லை. ஆயினும் லைன் வீடுகளால் சில நன்மைகளும் உண்டு.

நம் வாழ்வில் காணா சமத்துவம் உலாவும் இடங்கள் லைன் வீடுகள். லையனில் மலையாளி, தெலுங்கர், கன்னடர் இவர்களுக்குள் கிறித்துவர், இஸ்லாமியர், சர்வஜாதி இந்துக்கள் இருப்பார்கள். வீட்டு உரிமையாளர் கொங்கு வேளாளக் கவுண்டர், நாயக்கர், தேவர், தென்னாட்டு நாடார். ஆனாலும் மத இனப்பாகுபாடுகள் அறியப்போவதில்லை. வாடகை கூட அவரவர் தோதுப்போல முதல்தேதி முதல் இருபத்தொன்றாம் தேதிவரை தரலாம்... வீட்டு உரிமையாளரும் லைன் வீடுகளில் ஒன்றில் குடியிருக்க நேர்வதுண்டு. சில சமயம் அது தவப்பயன். அது சமயங்களில் அது இடர் (நாஞ்சில் நாடன், சூடிய பூ சூடற்க, கொங்குதேர் வாழ்க்கை, பக்.13-14) என நாஞ்சில்நாடன் இந்திய தேசிய ஒருமைப் பாடு, லைன் வீடு களில் குடியிருப்போரால் காப்பாற்றப்பட்டு வருவதைக் குறிப்பிடுகின்றார்.

எழுத்தாளர் வீட்டுக்கு எதிர்த்த லைனில் அண்மையில் கணவனும் மனைவியுமாக வயதான தம்பதியினர் குடிவருகின்றனர். முதுமை அவர்களை அச்சுறுத்தியது. அந்த முதியவர் எப்போதும் நாதசுரத்தை வாசித்துக் கொண்டே இருந்தார். இரவு அனைவரும் தூங்கும் வேளையில் 'சக்கனி ராஜ மார்கமு" என அவர் நாதசுரம் வாசிப்பது மற்றவர்கள் உறக்கத்திற்கு இடையூறாக இருக்கின்றது. பக்கத்துத் தெருவிலிருந்து அவசரமாக ஓடிவந்த அவரது மகள் நாதசுரத்தைப் பறித்து வைக்கின்றாள்.

*பிடுங்காத குறையாக நாதசுரம் பறி போயிற்று. வாசற்படி திண்டில் லயத்தை, தாளத்தைத் தொலைத்தவர் போல், இசை ஞான ரூபத்தை களைந்தவர் போல், சுரத்தை பணயம் வைத்துத் திரும்ப முடியாதவர் போல், நெடுநேரம் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். ... பிறகென்ன? இன்று வரை மறுபடியும் அந்தக் கிழவரின் நாதசுர ஓசை கேட்கவே இல்லை. கடைக்கே வைத்து விட்டார்களோ? காணாமற் போக்கி விட்டார்களோ? விறகாகத்தான் போயிற்றோ? (நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, கொங்குதேர் வாழ்க்கை, பக்.17-18).* இவ்வாறு முதுமையின் தனிமைத்துயரத்தையும் நாஞ்சில்நாடன் தன்னிரக்கத்தோடு இச் சிறுகதையில் சுட்டிக் காட்டியிருப்பது அவரது மனிதநேயத்திற்குச் சான்றளிப்பதாக அமைகின்றது.

**நாஞ்சில் நாடன் படைப்புலகம் - மதிப்பீடு**

சிறுகதையின் இலக்கணமென அழகு, சீர்மை, செறிவு, கலை வெளிப்பாடு, சமூக அக்கறை, தொனி என எண்ணற்ற சொற்கள் உண்டு தமிழில். இவையாவும் காலத்துக்குக் காலம், கோணத்துக்குக் கோணம், இடத்துக்கு இடம் மாறுபடும் தன்மைத்தன. மாறாதனவாக மனிதநேயமும் சொல்வதில் நேர்மையுமே உண்டு. அவற்றை நாஞ்சில் நாடன் சிறுகதைகளில் பரவலாகக் காண முடிகின்றது.

எழுத்தாளன் தனக்கு அனுபவமாகும் உலகிற்கும், தான் அர்த்தப்படுத்திக் கொண்டுள்ள உலகிற்குமான இடைவெளி சார்ந்த கேள்விகளுக்கான பதிலை தன் படைப்பின் வழியாகக் கண்டடைய முனைகின்றான். அவனது வாசகன் தம் அகவழிப் பயணத்தில் எதிர்கொள்ள நேருகின்ற கேள்விகளுக்கான விடைகளை தம் வாசிப்பின் வாயிலாகக் கண்டடைய முனைகின்றான். வெவ்வேறு பாதைகளின் இவ்விரண்டு தேடல்களும் ஏதோ ஒரு புள்ளியில் சந்திக்கும்போது எழுத்தாளனும் வாசகனும் ஒருவரையொருவர் திருப்தி செய்து கொள்கின்றனர். நாஞ்சில் நாடனின் கதைகள் வழியாக நாம் கண்டடைய முடிகின்ற விடைகள் யாவுமே நேரடியானவை; யதார்த்தமானவை; உள்ளதை உள்ளவாறே முகத்தில் அறைந்து சொல்லுபவை. நாஞ்சில் நாடனின் அகமனவோட்டங்களும், அவனது வாசகனின் அகமனவோட்டங்களும் சந்திக்கும் புள்ளிமையம் ஆதிமனிதனை முதன்முதலாகச் சுட்டெரித்த பசி என்னும் நெருப்பாகும். காலந்தோறும் மனிதனை ஓயவிடாமல் அலைக்கழிக்கும் இந்த பசி என்னும் நெருப்பே நாஞ்சில் நாடனின் புனைகதையுலகைக் கட்டமைத்துள்ளது. பசியினால் அமையும் சுயநலம், சுரண்டல், பித்தலாட்டம், கருணை, ஆங்காரம் ஆகியனவற்றின் தீராத இயக்கமே நாஞ்சில் நாடனின் சிறுகதை உலகமாகும்.

அவசர வாழ்வில் எதிர்கொள்ள நேர்கின்ற சரிவுகளையும் சமரசங்களையும் நாஞ்சில் நாடன் மட்டுமே கரிசனத்துடன் கவனப்படுத்தியுள்ளார். இந்தச் சரிவுகளும் சமரசங்களும் நமது உணவுப் பழக்க வழக்கங்கள் சார்ந்தவையாக மட்டுமில்லாமல் கலாசாரம், விழுமியங்கள் மற்றும் மதிப்பீடுகள் சார்ந்த சரிவுகளாகவும் சமர சங்களாகவும் அழுத்தம் பெற்றிருப்பது அவரது கரிசனத்தை அர்த்தப்படுத்துகின்றது.

நாஞ்சில் நாடனின் நாவல்கள் எதிரெதிர் துருவங்களான இரண்டு களங்களையும் அவற்றுக்கு இடையேயான பயணங்களையும் அலைக்கழிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டது. பொருளாதார, சாதிய ஏற்றத் தாழ்வுகள் மட்டுமே மனித மதிப்பீடுகளை உருவாக்கி ஆளுமை செய்யும் நாஞ்சில் நாட்டில் நாஞ்சில் நாட்டுக் கிராமத்தில் தனது இருப்பை நியாயப்படுத்தப் போராடும் இளைஞனின் கதைகளாக அமைந்த ‘தலைகீழ் விகிதங்கள்” ‘என்பிலதனை வெயில் காயும்” என்னும் நாஞ்சில்நாடனின்

நாவல்களும், மனிதக் கீழ்மைகளுக்கு நடுவில் தன் அன்றாடப் பிழைப்பை அனுசரித்து நகர்கின்ற எளிமையான கிராமத்தின் குரலாக அமைந்த 'மாமிசப் படைப்பு" என்னும் நாவலும், மண்வாசனையுடன், மனிதர்களை வாசகனுடன் புழங்க வைக்கின்ற உரையாடல் நுட்பத்துடன் தமிழ்நாவல் தளத்தில் சில புதிய பரிமாணங்களை ஏற்படுத்தி அவற்றை நிறுவிக் காட்டியுள்ளன.

கிராமத்திற்கும் அதன் மனிதர்களுக்கும் நேர்எதிரான போக்கைக் கொண்ட பெருநகரத்தையும், பொருளாதார அடுக்கின் இரண்டு முனைகளுக்கு நடுவில் சமன் பாடின்மையுடன் அலையும் அவசர மனிதர்களையும் களமாகக் கொண்டிருப்பவை "மிதவை","சதுரங்கக்குதிரை","எட்டுத்திக்கும் மதயானை" ஆகிய நாவல்களாகும். நாஞ்சில் நாடனின் நாவல்களுடன் ஒப்பிடும் போது அவரது சிறுகதைகள், நாவல் உலகத்திற்குப் பொருந்தாத உதிரிக்காட்சிகளே. இந்த உதிரிக்காட்சிகளின் வழியாக உருவாக்கப்பட்டுள்ள சித்திரங்கள், அவரது நாவல்களுக்கு இணையான அனுபவங்களையே சாத்தியப் படுத்துகின்றன. நாவல்களின் வாயிலாக மனம் வகுத்துக் கொண்டுள்ள மாநில எல்லைகளைஅவரால் எளிதாகக் கடந்துவிட முடிகின்றது. இதன் வழியாகவே அவரால் அக எல்லைகளைத் தாண்டிச் செல்லும் முனைப்பையும் பெற முடிந்தது. சிறுகதைகளின் பாதை, அவரது இப்போக்கிற்கு நேர் எதிரானது. நாஞ்சில் நாட்டு மண் எல்லையைத் தாண்டிய பின்னணியில் படைக்கப் பட்டுள்ள கதைகளின் மொழியும் மனிதர்களும் வேறுபட்டிருப்பினும், அக்கதைகளில் இயங்கும் அடிப்படை மனம் நாஞ்சில் நாட்டு எல்லைக்கு உட்பட்டதே. நாஞ்சில் நாட்டுக் களத்தில் நிகழும் 'காலக் கணக்கு" சிறுகதையில் உணரப்படுகின்ற மரணபயமே, பம்பாய் சூழலில் படைக்கப்பட்டுள்ள "வந்தான் வருவான் வாரா நின்றான்" என்ற கதையிலும் வெளிப்பட்டு நிற்கின்றது. "எருமைக்கடா"வில் சுரக்கும் கருணையே "உடன்படுமெய்" கதையிலும் அழுத்தம் பெற்றுள்ளது.

நாஞ்சில் நாடன் புனைகதைப் படைப்புக்களைப் பன்முகப் பார்வையில் அணுகும் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாட்டு மண்ணில் பிறந்து கணிதம் பயின்ற நாஞ்சில் நாடன் இன்று மொழி, மாநிலம், இனம் போன்ற பிரிவினை எல்லைகளைக் கடந்து இந்திய எழுத்தாளராகத் திகழ்வது வெளிப்பட்டு நிற்கின்றது.

## முடிவுரை

இவ்வாறு நாஞ்சில்நாடன் 'சூடிய பூசூடற்க" என்னும்தம்சிறுகதைத்தொகுப்பு நூலினுள் நாஞ்சில் நாட்டுப் பண்பாட்டுத் தளத்தில் நின்று, தமிழக மக்களின் பல்வேறு வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் சமுதாயப் பண்பாட்டியல் தளத்தில்நுணுக்கமாகவெளிப்படுத்தியிருப்பதை அறிய முடிகின்றது. அரசியல், சமுதாயச் சிந்தனைகளை ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்துள்ள நாஞ்சில்நாடன், இந்திய தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையையே பெரிதும் விழைகின்றார். அவர் தமிழ்ப் படைப்பாளி என்னும் எல்லையைக் கடந்து இந்திய எழுத்தாளர் என்னும் நிலைக்கு உயர்ந்துள்ளார்.

## பயன்பட்டநூல்

1. நாஞ்சில்நாடன், சூடிய பூ சூடற்க, தமிழினி பதிப்பகம், சென்னை.